# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

### Sessions Case No. 25/2022

Deposition of witness for : PW13

Name : ராஜகோபால்

Father's / Husband Name : பழனியப்பன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 21st day of January 2025.

21-01-2025

**1 முதல் 6 வரையிலான எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:-**

நான் மாணவக்காடு, கஸ்தூரிப்பட்டி, சங்ககிரியில் குடியிருந்து வருகிறேன். நான் ஹோட்டல் வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது. புகார் கொடுப்பதற்காக காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன். போலிசார் அப்போது என்னிடம் கையெழுத்து

வாங்கினார்கள். வேறு ஒன்றும் தெரியாது. அது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பில், சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதி கோரியதன் பேரில், சாட்சி பிறழ்சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

09.04.2021ம் தேதி பிற்பகல் 15.00 மணியளவில் சங்ககிரி காவல் ஆய்வாளர் அவர்கள் மேற்படி காவல் நிலையத்திற்கு என்னை அழைத்ததின் பேரில் நான் அங்கு சென்றேன். அங்கு பூபதி(A6), த/பெ. ஆறுமுகம் என்ற நபரை ஒரு குற்ற வழக்கு சம்மந்தமாக விசாரிக்க இருப்பதாகவும், அதற்கு என்னை சாட்சியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார் என்றும், அதை நான் ஒப்புக்கொண்டேன் என்றும், அன்று 15.30 மணியளவில் காவல் ஆய்வாளர் அவர்கள் எதிரி பூபதி(A6) என்பவரை என் முன்னிலையிலும், சுபாஷ் என்பவர் முன்னிலையிலும் விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், சுபாஷ் என்பவரும் கையெழுத்து போட்டோம் என்று போலிஸ் விசாரணை சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு சாதகமாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஒம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.